# SUBORDINATE COURT, PADMANABHAPURAM

## CASE NO.SC. 82/2017

## Deposition of P.W. 6

Name : தேவராஜ்

S/o, D/o, W/o : செல்லையன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**03.09.2025**

**Accused Present**

<u>முதல் விசாரணை</u>–

நான் அருமனையில் வசித்து வருகிறேன். வெளிநாட்டில் ஓட்டுனராக பணியாற்றினேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். எனது மைத்துனரின் வீட்டின் அருகே எனக்கு நிலம் இருந்தது. அதில் ரப்பர், தென்னம்மரம் பயிரிடப்பட்டிருந்தது. நான் வெளிநாட்டில் இருந்ததால் அதை அனுபவம் செய்து கொள்ள சொன்னேன். அனுபவம் எடுக்க சென்ற போது சொத்து கிடையாது என்று தகராறு செய்தார். 2003ம் ஆண்டு எதிரி என் மீதும், எனது மகன்கள் மீதும் ஆசிட் ஊற்றினார். 2009ம் ஆண்டு எனது காலில் எதிரி வெட்டி விட்டார். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்தேன். அதன் பிறகு கிம்ஸ் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்தேன். சிவில் வழக்கு தொடர்பாக செந்தில் குமார் தான் பார்த்து கொண்டிருந்தார். அப்போது

செந்தில்குமார், அல்போன்ஸ் வக்கீலை பார்ப்பதற்காக தக்கலை பழைய பஸ் ஸ்டேன்ட் அருகே உள்ள கல்லறை தோட்டம் அருகே வந்த போது எதிரி செந்திலை வெட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை 21.02.2010ம் தேதி என்னை விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று தெரியாது., ஆனால் சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். செந்திலை எதிரி வெட்டியதை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் எதிரி வெட்டியதாக கேள்விபட்டேன். அ.சா.1 எனது சகோதரி மகன். எனது வீடு அருமனை முழுக்கோட்டில் உள்ளது. வழக்கறிஞர் அல்போன்ஸ் அலுவலகத்திற்கு நிறைய முறை சென்றுள்ளேன். வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அருகே இரண்டு பக்கமும் நிறைய கடைகள் உள்ளன. எதிரி மீது சிவில் வழக்கு போடவில்லை. கிரிமினல் வழக்கு போட்டுள்ளோம். சம்பவ இடத்திலிருந்து எனது வீடு 12 கி.மீ துாரம் இருக்கும். ஜெபமணி மீது போடப்பட்ட சிவில் வழக்கில் செந்தில்குமார் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரி மீது போடப்பட்ட வழக்குகளில் செந்தில்குமார் புகார்தாரராகவும், சாட்சியாகவும் இருந்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி மீதும், ஜெபமணி மீதும் போடப்பட்டுள்ள வழக்குகள் விடுதலை ஆகி விட்டது என்றால் சரியல்ல. நான், செந்தில்குமார் மற்றும் அவரது தந்தை நாகப்பன், எனது மகன்கள் ஆகியவர்கள் எதிரியை தாக்கியதாக எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஜெபமணியை வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்திய வழக்கு ஆண்டு பட்டிகை வழக்கு எண்.

382/2018 ஆக நிலுவையில் உள்ளது என்றால் அது பொய் வழக்கு. மேற்படி வழக்கு பிரிவு 326 இ.த.ச படி போடப்பட்ட வழக்கு என்றால் பொய் வழக்கு ஆகும். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. குலசேகரம் போலீசார் எதிரியை சம்பவத்திற்கு 3 நாட்களுக்கு முன்னர் கைது செய்து எதிரியின் மனைவி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சோதனை பிடியாணை பெற்றதால் அங்கிருந்து கொற்றிக்கோடு காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து பின்னர் தக்கலை காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து புகார்தாரர் செந்தில்குமாரை அழைத்து பொய்யான புகார் பெற்று பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.